# CIBA EHP Cura I – EHPக்கான இயற்கை சிகிச்சை மருந்து

ICAR-CIBA, *Enterocytozoon hepatopenaei* (EHP) தொற்று மற்றும் கட்டுப்பாட்டுக்காக இயற்கை மூலிகை மருந்தான ‘CIBA EHP Cura I’ உருவாக்கியுள்ளது. EHP என்பது இறால்களில் ஹெபடோபாங்க்ரியாடிக் மைக்ரோஸ்போரிடியோசிஸ் (HPM) என்ற நோயை ஏற்படுத்தும் காரணக் கிருமியாகும். மைக்ரோஸ்போரிடியன் பராசைட் முதலில் 2009-ல் தாய்லாந்தில் பினெயஸ் மோனோடான் இறால் *(Penaeus monodon)* இனத்தில் கண்டறியப்பட்டது. அதிலிருந்து, EHP இந்தியா உட்பட தென்கிழக்கு ஆசிய நாடுகளில், பரவலாக பதிவுசெய்யப்பட்ட்டது. EHP கடுமையான நோயுற்ற நிலை வளர்ச்சி குறைபாடு மற்றும் வெள்ளை மல நோய்க்குறி ஆகியவற்றை உண்டாக்குகிறது. இது இறால் வளர்ப்பில் கடுமையான உற்பத்தி மற்றும் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்துகிறது.




CIBA EHP Cura I

## தயாரிப்பு சேர்மானம் மற்றும் செயல் முறை

‘CIBA EHP Cura I’ என்பது பயோஆக்டிவ் பைட்டோகெமிக்கல், கல்லீரல் பாதுகாப்பு நியூட்ராசூட்டிகல்கள் மற்றும் சத்துச் சேர்மானங்களின் ஒரு தனித்துவமான கலவையாகும், இதில் மைக்ரோஸ்போரிடியன் எதிர்ப்பு, நுண்ணுயிர்க்கொல்லி, நோய் எதிர்ப்பு சக்தி தூண்டுதல் மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட் பண்புகள் உள்ளன. இது EHP நோய்கிருமியின் வீரியத்தை குறைத்து ஆரோக்கியத்தை மேம்படுத்தும் விதமாக செயல்படுகிறது.

❖ **ஸ்போர் முளைப்பை தடுக்கிறது:** ‘CIBA EHP Cura I’ இல் உள்ள பைட்டோகெமிக்கல், ஸ்போர் சுவரை ஊடுருவி, ஸ்போர் முளைத்தலை நேரடியாக தடுத்து, EHP நோய்க்கிருமி கல்லீரல் பகுதியில் மேலும் பரவுவதைத் கட்டுப்படுத்துகிறது.

❖ **கல்லீரல் பாதுகாப்பு:** நியூட்ராசூட்டிகல்கள் மற்றும் சத்துச் சேர்மானங்கள் ஆன்டிஆக்ஸிடன்ட்களாக செயல்பட்டு, செல்களின் வலிமையை மேம்படுத்தி, ஆக்ஸிடேட்டிவ் ஸ்டிரெஸ் மற்றும் வீக்கத்தை குறைத்து, EHP பாதித்த கல்லீரல் செல்களை பாதுகாக்கிறது.

❖ **நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தல்:** ‘CIBA EHP Cura I’ ல் உள்ள மூலப் பொருட்கள் பாகோசைடோசிஸ் மற்றும் நோய் எதிர்ப்பு செயல்பாடுகளை தூண்டி, EHP தொற்றினை எதிர்த்துத் தடுக்கின்றன.

❖ **செரிமான ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்:** நோய்க்கிருமி சுமையை குறைப்பதன் மூலம் செரிமானத்தை மேம்படுத்தி, சத்துக்களை உறிஞ்சுவதற்கு உதவி செய்கின்றது இதனால் நல்ல வளர்ச்சி, உயிர்வாழ்தல் (Survival) மற்றும் உணவுப் பரிமாற்ற விகிதத்தை (FCR) மேம்படுத்துகிறது.

❖ **வெள்ளை மல நோய்க்குறி கட்டுப்பாடு:** ‘CIBA EHP Cura I’, EHP மற்றும் விப்ரியோ கிருமிகளை அளிப்பதன் மூலம், வெள்ளை மல நோய்க்குறி ஏற்படுவதைத் கட்டுப்படுத்துகிறது.

## CIBA EHP Cura I பயன்கள்

❖ **EHP தொற்றைக் குறைப்பது:** EHP நோய்க்கிருமியை நேரடியாகக் அளிப்பதன் மூலம், இறால் வளர்ச்சியில் தொற்று பரவலைத் தடுக்கிறது.

❖ **வளர்ச்சி மற்றும் உயிர் நீடிப்பு:** செரிமானத்தை மேம்படுத்தி, நோய் எதிர்ப்பு சக்தியை உயர்த்தி, இறால்களின் வளர்ச்சி மற்றும் உயிர்வாழ்தல் (Survival) விகிதத்தை மேம்படுத்துகிறது.

- **சுற்றுப்புறச் சூழலுக்கு பாதுகாப்பானது:** 'CIBA EHP Cura I' ஒரு இயற்கை மூலிகை கலவையாக இருப்பதால், சுற்றுப்புறச் சூழலுக்கும் இறால்களுக்கும் பாதுகாப்பானது, மற்றும் நிலைத்த முறையில் விவசாயத்தை மேற்கொள்ள உதவுகின்றது.
- **இறால் வளர்ப்பில் லாபத்தை அதிகரிக்கிறது:** இறால் ஆரோக்கியத்தை சீர்படுத்தி, உணவுப் பரிமாற்றத்தை மேம்படுத்தி, இறால் வளர்ப்பில் அதிகமான லாபத்தைக் கொடுக்கின்றது.

## பயன்பாடு மற்றும் மருந்தளவு

- **மருந்தளவு:** 1-2 வாரங்களுக்கு உணவில் 50 மிலி/கிலோ அளவில் அளிக்க வேண்டும்.
- **பயன்பாடு:** உணவின் மேல் பூசும் (feed top coating) முறையில் இதைப் பயன்படுத்தலாம்.
- **இடும் காலம்:** காலை மற்றும் மாலை என தினமும் இரண்டு வேளை அளிக்கலாம். தொற்று கடுமையாக இருந்தால், நாளொன்றுக்கு நான்கு வேளை அளிக்கலாம். தடுப்பு முறையாக, தினசரி ஒரு வேளை அளிக்கலாம்.



CIBA EHP Cura I
தீவனத்தில் கலந்து தயார் செய்தல்

## தர நிலை மதிப்பீடு மற்றும் வணிகமயமாக்கல்

- இந்த தயாரிப்பு தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், குஜராத், மேற்கு வங்காளம் மற்றும் பஞ்சாப் போன்ற மாநிலங்களில் உள்ள இறால் பண்ணைகளில் பரிசோதிக்கப்பட்டு, அதன் பயன்கள் உறுதிசெய்யப்பட்டது. இம்மருந்து சந்தைப்படுத்தலுக்காக மீனம் அக்வா நீட்ஸ், சென்னை, சாய் அக்வா ஃபீட்ஸ், பாபாட்லா, நியோமெட்ஸ் பிரைவெட் லிமிடெட், ஹைதராபாத் போன்ற நிறுவனங்களுக்கு வணிகரீதியாக வழங்கப்பட்டுள்ளது.



CIBA EHP Cura I தர நிலை மதிப்பீடு 5 மாநிலங்களில் உறுதிசெய்யப்பட்டது.